சென்று, பல ஆண்டுகளாக அங்கே தங்கியிருந்து, அவருடைய சிஷ்யனாக இருந்து, கொஞ்சம் கொஞ்சமாக அந்த நாலாயிரம் பாடல்களை திரட்டிக் கொண்டுவந்து கொடுத்ததால்தான், இன்றைக்கு, தமிழ் இலக்கியத்திலே, தமிழ் மொழியிலே இருக்கின்ற அற்புதமான பாடல்களைக் கொண்ட நாலாயிர திவ்ய பிரபந்தம் வைணவர்களுடைய தமிழ் வேதமாக இருக்கின்றது. இன்றைக்கு, இவ்வளவு பெரிய வைணவத்திற்கு உயிர் கொடுத்திருப்பது நாலாயிர திவ்ய பிரபந்தம். காட்டுமன்னார்கோவில்மூலம் நம்முடைய தமிழுக்குக் கிடைத்த பெரிய நன்கொடை இது. மாண்புமிகு திரு. பன்னீர்செல்வத்துக்கு தெரியுமோ தெரியாதோ என்று எனக்குத் தெரியாது. ஆனால், திரு. சிந்தனை செல்வனுக்குத் தெரிந்திருக்கிறது, அதனால் கேட்டிருக்கிறார். ஆகையினால், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அவருடைய கேள்விக்கு உரிய மரியாதை கொடுத்து, அதை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

புதிய சார் கருவூலம்

***6751—திரு. S. சந்திரன்**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி. பேட்டை வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், இரா.கி. பேட்டை வட்டத்தில் நாளது தேதியன்று சார் கருவூலம் ஏதும் செயல்படவில்லை. சார் கருவூலங்கள் இல்லாத வட்டத்

2022 மார்ச் 23]

தலைமையிடங்களில் புதிய சார் கருவூலங்கள் அமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க அரசாணை (நிலை) எண் 324, நிதித் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, நாள்: 27–9–2018–ன்படி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி அமைக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு ஆய்வு செய்து அளித்துள்ள அறிக்கையில், திருவள்ளூர் மாவட்டம், இரா.கி.பேட்டை வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைக்க பரிந்துரை செய்துள்ளது. அக்குழுவின் பரிந்துரையின்படி, திருவள்ளூர் மாவட்டம், இரா.கி.பேட்டை வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைப்பதற்கான கருத்துருக்கள் கருவூல கணக்கு ஆணையரிடமிருந்து பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, உரிய நடைமுறைகளைப் பின்பற்றிய பிறகு திருவள்ளூர் மாவட்டம், இரா.கி.பேட்டை வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவே திரும்பிப் பார்க்கக்கூடிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் தாக்கல் செய்துள்ளார். தேர்தல் அறிக்கையில் சொன்னதையும், சொல்லாததையும் செய்யும், மாண்புமிகு மக்கள் முதல்வர் தலைவர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

19–2–2009–ல் அறிவிக்கப்பட்ட திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டத்தில் இதுநாள்வரை சார்நிலை கருவூலம் இல்லை. இதனால் அரசு ஊழியர்கள், நில அளவீடு செய்திடும் பொதுமக்கள், 500–க்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் 35 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பள்ளிப்பட்டு சார்நிலை கருவூலத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. மேற்கண்ட பள்ளிப்பட்டு சார்நிலை கருவூலத்தில் 62 அலுவலகங்கள் பயன்பாட்டில் உள்ளன. இதில் இரா.கி.பேட்டை வட்டத்தில் மட்டும் 30 அரசு அலுவலகங்கள் உள்ளன. இரா.கி.பேட்டையிலிருந்து பள்ளிப்பட்டுக்குச் சென்று பணப் பரிவர்த்தனை செய்வது சிரமமாக உள்ளது;

காலநேரம் விரையமாகிறது. எனவே, இந்த ஆண்டு அதற்கான அறிவிப்பினை வெளியிட, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக அங்கேயிருக்கிற சில பிரச்சினைகளையும், மக்களுடைய நிலையையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதனடிப்படையில், இந்த ஆண்டு கட்டக்கூடிய துணை கருவூலங்களில், அவர் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த ஆண்டே அதைக் கட்டி முடிப்பதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன். நன்றி சொல்லி, உட்காருங்கள்.

திரு. S. சந்திரன்: மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழியிலே திட்டங்களை நிறைவேற்றுவதுபோல, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

46—

பால் கொள்முதல் நிலையம்

***6768—திரு. கு. செல்வபெருந்தகை:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, படப்பை பகுதியில் புதிய பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?